# பத்திரிக்கைச் செய்தி

## வழக்கில் சட்ட கருத்துரு வழங்கவும் வழக்கை நடத்தவும் ரூ.15,000/- கேட்டு பெற்ற அரசு வழக்கறிஞருக்கு 2 வருட கடுங்காவல் தண்டணை மற்றும் ரூ.5,000/- அபராதம் விதித்து தீர்ப்பு

புகார்தாரர் திரு.ராஜகோபாலன், சிவானந்தபுரம், கோயம்புத்துார் மாவட்டத்தில் வசித்து வந்தார். புகார்தாரரின் மகளுக்கும் அவருடைய கணவருக்கும் இடைய வரதட்சணை பிரச்சினை காரணமாக கோயம்புத்துார் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டு புலன் விசாரணை மேற்கொண்டு கோயம்முத்துார் அரசு வழக்கிறஞர் அவர்களிடம் சட்டக்கருத்துருக்காக அனுப்பபட்டது. இவ்வழக்கில் அரசு தரப்பு வழக்கறிஞராக திரு.நாகராஜன், என்பவர் சட்டக்கருத்து வழங்கவும், ஆஜராகி வழக்கை நடத்தவும் தனக்கு ரூ.15,000/- லஞ்சமாக கொடுக்க வேண்டும் என புகார்தாரரிடம் கேட்டுள்ளார். லஞ்சம் கொடுக்க விரும்பாத புகார்தாரர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, கோயம்புத்துார் பிரிவில் புகார் மனு சமர்ப்பித்துள்ளார். இது சம்பந்தமாக 16.09.2008 அன்று பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி பொறிவைப்பு நடவடிக்கையின் போது திரு.நாகராஜன், அரசு வழக்கறிஞர், லஞ்ச பணமான ரூ.15,000/- புகார்தாரரிடமிருந்து பெற்றபோது கைது செய்யப்பட்டார். பின் இவ்வழக்கு ஊழல் தடுப்பு வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றத்தில் வழக்கு நடைபெற்று வந்தது. பின் குற்றவாளி தரப்பில் வழக்கை திருப்பூருக்கு மாற்ற வேண்டும் என்ற கோரிக்கை ஏற்கப்பட்டு வழக்கு திருப்பூர் தலைமை நீதித்துறை நடுவர் மன்றத்திற்கு மாற்றப்பட்டு வழக்கு நடத்தப்பட்டது. இவ்வழக்கில் இன்று 31.03.2023ம் தேதி தலைமை நீதித்துறை நடுவர் மன்றத்தால் எதிரி திரு.நாகராஜனுக்கு முன்னாள் அரசு வழக்கறிஞர், கோயம்முத்துார் என்பவர் சட்டப்பிரிவு 7of PC Act-ன் 1988 கீழ் 1 வருட கடுங்காவல் தண்டனையுடன் ரூ.5,000/- அபராதமும், சட்டப்பிரிவு 13(2) & 13(1) (d) of PC Act-ன் கீழ் 2 வருட கடுங்காவல் தண்டனையுடன் ரூ.5,000/- அபராதமும் விதித்து தண்டணையை ஏககாலத்தில் அனுபவிக்க வேண்டும் என தீர்ப்பு வழங்கப்பட்டது.